செ.வெ.எண்: 718 நாள்: 05.11.2020

**கும்பகோணம் அரசு பொறியியல் கல்லூரி மாணவர்களின் புதிய கண்டுபிடிப்பு மாவட்ட ஆட்சித் தலைவர் திரும.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் பாராட்டு.**

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அரசு பொறியியல் கல்லூரி இயந்திரவியல் துறை மூன்றாம் ஆண்டு மாணவர்கள் கொரோனா சூழலில் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்தும் நவீன கருவி கண்டுபிடிப்பு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ்,இ.ஆ.ப.,அவர்கள் இன்று (05.11.2020) நேரில் பாராட்டு.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே உள்ள அரசு பொறியியல் கல்லூரியில் இயந்திரவியல் துறை மூன்றாம் ஆண்டு படிக்கும் மாணவர்கள் சஞ்சய் பாலாஜி, ஜோஸ்வா ஆரோக் ஆஸ்டின் மற்றும் முன்னாள் மின்னணு மற்றும் தகவல் தொடர்பியல் துறை மாணவர் முத்துகிருஷ்ணன் ஆகியோர் இணைந்து கூட்ட நெரிசலை கட்டுப்படுத்தும் கருவியை பேராசிரியர்கள் சதிஷ்குமார் மற்றும் வேணிப்பிரியா ஆகியோரின் வழிகாட்டுதலின் அடிப்படையில் வடிவமைத்துள்ளனர்.

கொரனா தொற்று அதிகம் பரவி வரும் இன்றைய சூழ்நிலையில் பாதுகாப்பு என்பது மிக முக்கிய காரணியாக உள்ளது. அதை மனதில் கொண்டு பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களான வழிபாட்டுத் தலங்கள், திரையரங்குகள், மற்றும் பல்வேறு வர்த்தக நிறுவனங்களில் கூட்ட நெரிசலை தவிர்க்க மாணவர்கள் இந்த கருவியை வடிவமைத்து உள்ளனர். மேலும் இது போன்ற இடங்களுக்கு நாம் வீட்டிலிருந்து புறப்படும் முன்பே அங்கு உள்ள கூட்ட நெரிசலை புதிதாக இவர்களால் வடிவமைக்கப்பட்டுள்ள மொபைல் செயலி மூலம் தெரிந்து கொள்ள முடியும். மேலும் காவல்துறை அதிகாரிகளும் அனைத்து இடங்களிலும் உள்ள கூட்ட நெரிசலை காவல்துறை கட்டுப்பாட்டு அறையில் இருந்து கண்காணிக்க முடியும். தொற்று பேரிடர் காலத்தில் பிரத்யேகமாக தயாரிக்கப்பட்டுள்ள இந்த கருவியை மாவட்ட ஆட்சித்தலைவா் பார்வையிட்டு மாணவர்களை பாராட்டி மக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்.

மேலும் முதல் கட்டமாக இந்த கருவி கல்லூரி வளாகத்தில் மாணவர்கள் பயன்பாட்டிற்காக மாவட்ட ஆட்சியர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்தக் கருவியை தயாரிக்க ஆகும் செலவு ரூபாய் 4500 மட்டுமே. குறைந்த செலவில் உருவாக்கப்பட்ட இந்த புதிய கண்டுபிடிப்பு இன்றைய காலகட்டத்தில் கூட்ட நெரிசல் அதிகம் உள்ள பகுதிகளில் பொதுமக்களுக்கு மிக அத்தியாவசியமான ஒன்றாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. இந்த மாணவர்களுக்கு கல்லூரி நிறுவனத் தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள், கல்லூரி முதல்வர் முனைவர். பால முருகன் அவர்கள், துணை முதல்வர் முனைவர். கலைமணி சண்முகம் அவர்கள், கல்விப்புல தலைவர் முனைவர். ருக்மாங்கதன் அவர்கள், இயந்திரவியல் துறைத்தலைவர் சுந்தர செல்வன் அவர்கள் மற்றும் கல்லூரி ஆசிரிய பெருமக்கள் அனைவருக்கும்,வாழ்த்துக்களையும்,பாராட்டுக்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார்.

**தொடர்ந்து கும்பகோணம் பச்சயப்பன் குளம் புணரமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் திறந்து வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது**

கும்பகோணம் நகரத்தில் 44 நீர்நிலைகளிலுள்ள ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு, அந்நீர்நிலைகளுக்கான வரத்து வாய்க்கால் மற்றும் போக்கு வாய்க்கால் புனரமைக்கப்பட்டு, முழுமையாக தூர்வாரி நீர்நிலைகளை சுற்றி நடைபாதை அமைக்கப்பட்டு, குழந்தைகளுக்கான சிறுவர் பூங்கா, பசுமையான செடி கொடிகள், யோகா மண்டபம், குளத்தை சுற்றி போதுமான மின் விளக்குகள் ஆகியவை அமைக்கப்படவுள்ளது. கும்பகோணம் பச்சையப்பன் குளம் கும்பகோணம் சிட்டி யூனியன் வங்கி சார்பில் 1.63 கோடி ரூபாய் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டு காவிரி ஆற்றிலிருந்து குளத்திற்கு தண்ணீர் கொண்டுவருவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. பொதுமக்கள் நீர்நிலைகளில் குப்பைகளை போடாமல் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் மற்றும் பொதுமக்கள் ஒத்துழைப்பின் காரணமாக கொரோனா நோய்த்தொற்று எண்ணிக்கை குறைந்து கொண்டிருக்கிறது. தீபாவளி பண்டிகை வர இருப்பதையொட்டி, ஒவ்வொரு வருவாய் கோட்டத்திலும் உள்ளாட்சி அமைப்பின் மூலம் அலுவலர்கள் தலைமையில் வணிக நிறுவனங்களுக்கான கூட்டம் நடைபெற உள்ளது. அக்கூட்டத்தில் தீபாவளி பண்டிகை வியாபாரத்தின்போது வணிக நிறுவனங்கள் கடைபிடிக்க வேண்டிய கொரோனா தடுப்பு நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து அறிவுறுத்தப்படவுள்ளது. சமூக இடைவெளி கடைப்பிடித்தல், கை சுத்திகரிப்பான் பயன்படுத்துதல், முகக்கவசம் அணிதல் ஆகியவற்றை கட்டாயம் பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்தப்படவுள்ளது.என மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில் அரசு அலுவலர்கள் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.